(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 13.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2020 ஒக்டோபர் 06 செவ்வாய்க்கிழமை, மு.ப. 10.00 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

9/2020

கௌரவ ஹேஷா விதானகே,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு உரித்தான —

(i) கைத்தொழில் பேட்டைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) நில அலகுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) கைத்தொழில் பேட்டைகளில் இயங்கும் கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) கைத்தொழில் பேட்டைகளில் தொழில் புரியும் ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2017 ஆம் ஆண்டில் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் மத்திய மாகாணத்துக்காக —

(i) சுயதொழில் மேம்பாட்டுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்ட இடங்கள் யாவையென்பதையும்;

(iii) வழங்கப்பட்டுள்ள கருவிகள் யாவையென்பதையும்;

(iv) பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ள அடிப்படை யாதென்பதையும்;

(v) மேற்கொள்ளப்பட்டுள்ள தொழில்நுட்ப பயிற்சி வேலைத்திட்டங்கள் யாவையென்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தற்போது இணையத்தின் ஊடாக இலத்திரனியல் வர்த்தகத்தை மேற்கொள்வதற்கான வாய்ப்பு கிராமிய பிரதேசங்களில் வாழ்வோருக்குக்கும் திறந்துவிடப்பட்டுள்ள போதிலும், அதற்கான போதிய அறிவு வழங்கப்படவில்லை என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) இவ்வறிவினை முறையாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2.

58/2020

கௌரவ சமிந்த விசேறி,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல் தொடர்பாக —

(i) விசாரணைக்கு உள்ளாக்கப்பட்ட அரச நிறுவனங்களையும் நியதிச் சட்ட நிறுவனங்களையும் சேர்ந்த ஊழியர்களின் எண்ணிக்கை;

(ii) கைது செய்யப்பட்ட அரச நிறுவனங்களையும் நியதிச் சட்ட நிறுவனங்களையும் சேர்ந்த ஊழியர்களின் எண்ணிக்கை;

எத்தனை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஊழியர்கள் சேவையில் ஈடுபட்டிருந்த அரச/நியதிச் சட்ட நிறுவனங்களின் பெயர்கள்;

(ii) மேற்படி ஊழியர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் அவர்கள் குறிப்பிட்ட நிறுவனங்களில் வகித்த பதவிகள்;

(iii) குறிப்பிட்ட ஊழியர்களுக்கு எதிராக இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்;

(iv) எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் நடவடிக்கைகள்;

யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

100/2020

கௌரவ புத்திக பத்திறண,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்களின் சட்டப் பிரச்சனைகளுக்குத் துரிதமாக தீர்வு காண்பதற்கும், சட்ட ஆலோசனைகளைப் பெறுவதற்கும் ஒரு நீதவான் நீதிமன்ற நியாயாதிக்கப் பிரதேசத்துக்கு குறைந்த பட்சம் தலா ஒரு சட்டத்தரணியை பொலிஸ் வழக்குகளை கையாளும் உத்தியோகத்தராக (Prosecutor) குறிப்பிட்ட நியாயாதிக்கப் பிரதேசத்திற்காக நியமிப்பதன் மூலம் இலங்கைப் பொலிஸிடமிருந்து சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் மக்கள் அதிக பயனடைவார்கள் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ஆ) (ii) மேற்படி புதிய பதவியினை உருவாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சாத்தியம் காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

128/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— பிரதம அமைச்சர் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னார் மாவட்டத்தின் மன்னார் பிரதேசத்திற்குரிய தாழ்வுபாடு பிரதேசத்தில் அமைந்திருந்த கலாசார நிலையமானது யுத்தம் நிகழ்ந்த காலப்பகுதியில் மன்னார் மாவட்டச் செயலகத்தின் பயன்பாட்டிலிருந்தபோது சேதமடைந்ததன் காரணமாக 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் மூலம் மேற்படி சேதமடைந்த கலாசார நிலையத்திற்குப் பதிலாக புதிய கலாசார நிலையமொன்றை அமைப்பதற்காக 25 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது என்பதையும்;

(ii) மேற்படி கலாசார நிலையத்தை நிர்மாணிப்பதற்காக அப்போதைய கலாசார அமைச்சின் செயலாளர் உட்பட அத்திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் நேரடியாக குறித்த பிரதேசத்திற்குச் சென்று அதற்காகத் தேவைப்படும் காணித் துண்டொன்றை இனங்கண்டு அப்போதைய கலாசார அமைச்சிற்கு அக்காணியின் அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், இப்புதிய கலாசார நிலையத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

161/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கொலொன்னாவ பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தஹம்புர, பொத்துவில்கும்புர, 101 ஆம் இலக்கத் தோட்டத்தில் சட்டவிரோத வீடுகள் கணிசமான எண்ணிக்கையில் காணப்படுகின்றன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீடுகளில் வதியும் குடும்பங்களில் அரச மாடி வீட்டுக் கருத்திட்டத்தில் வீடுகள் வழங்கப்பட்ட குடும்பங்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனின், அக்குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) அவர்களுக்கு மேற்படி வீடுகளை வழங்கும்போது அரசாங்கத்தினால் பணம் அறவிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனின், அது எதற்காக என்பதையும்;

(v) அவ்வீடுகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கப்பட்ட செயல்முறை யாதென்பதையும்;

(vi) அப்பிரதேசத்தில் மேலும் வீடுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு எஞ்சியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(vii) அவர்களுக்கு வீடுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

184/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) யாழ்ப்பாண மாவட்டத்தில் தீவுக் கூட்டத்தில் எழுவைதீவு எனும் தீவொன்று இருப்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி தீவில் காணப்படும் அரசாங்க பாடசாலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) எழுவைதீவிற்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையிலான கடல் மார்க்க தூரம் எத்தனை கிலோமீற்றர்கள்;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) எழுவைதீவு எனும் பழைய தீவில் சரவணபவா கல்லூரியில் கல்விப் பொதுத் தராதர (சா.த.) பரீட்சைக்கு இறுதியாக மாணவர்கள் தோற்றிய வருடம் யாது;

(ii) மேற்குறிப்பிட்ட பாடசாலை மாணவர்கள் தற்போது மேற்குறிப்பிட்ட பரீட்சைக்கு தோற்றும் நிலையம் யாது;

(iii) கல்விப் பொதுத் தராதர (சா.த.) பரீட்சையை எழுவைதீவில் நடாத்துவதில் உள்ள தடை யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

7.

212/2020

கௌரவ மொஹமட் முசம்மில்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பிளாஸ்ரிக்கின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி பிளாஸ்ரிக் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது என்பதையும்;

(iv) மேற்படி பிளாஸ்ரிக் இறக்குமதியை மேற்கொண்ட கம்பனிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுயில் இலங்கைக்கு பிளாஸ்ரிக் இறக்குமதி செய்வதற்காக செலவிடப்பட்ட மொத்த பணத் தொகை யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

251/2020

கௌரவ வேலு குமார்,— பெருந்தோட்ட அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் முள்ளுத்தேங்காய் (Palm Oil) பயிர்ச்செய்கையில் ஈடுபடும் கம்பனிகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு கம்பனியினாலும் முள்ளுத்தேங்காய் பயிரிடப்படும் நிலத்தின் அளவு தனித்தனியாக எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) முள்ளுத்தேங்காய் பயிரிடுவதற்கான அனுமதிப்பத்திரம் குறித்த கம்பனிகளிடம் காணப்படுகின்றனவா;

(ii) தற்போது பயிரிடப்படுகின்ற முள்ளுத்தேங்காய் பயிர்ச்செய்கைகளை அகற்றுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா;

என்பதையும் அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

9.

304/2020

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அம்முறைப்பாடுகளில் விசாரணைகள் நிறைவுசெய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) விசாரணைகள் நிறைவுசெய்யப்பட்ட முறைப்பாடுகளில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) முறைப்பாடு கிடைக்கப்பெற்று, விசாரணை மேற்கொள்ளப்பட்டு, குற்றப்பத்திரம் தாக்கல் செய்வதற்கு அல்லது முறைப்பாட்டைத் தள்ளுபடி செய்வதற்கு சாதாரணமாக எடுக்கும் காலம் யாதென்பதையும்;

(v) விசாரணை நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்காக அதிகாரசபையினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இம்முறைப்பாடுகளுடன் தொடர்புடைய பாதிக்கப்பட்ட சிறுவர்களில் —

(i) தமது குடும்பங்களுடன் இருப்பவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தமது குடும்பங்களிலிருந்து விலக்கி வைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அவ்வாறு விலக்கி வைக்கப்படுபவர்கள் தடுத்து வைக்கப்படுகின்ற இடங்கள் யாவையென்பதையும்;

(iv) தமது கல்வி நடவடிக்கைகளில் (முறைசார் மற்றும்/அல்லது முறைசாரா) முன்னர் போன்றே தொடர்ந்து ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை சதவீத அடிப்படையில் யாதென்பதையும்;

(v) முறையாகப் பயிற்சிபெற்ற ஆட்களினால் உளவியல் மற்றும் சமூக ரீதியிலான ஒத்துழைப்பு வழங்கப்பட்டுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இம்முறைப்பாடுகளுடன் தொடர்புடைய பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும் அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

10.

10/2020

கௌரவ ஹேஷா விதானகே,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சீனக்குடாவில் அமைந்துள்ள எண்ணெய் தாங்கி கட்டிடத் தொகுதி பண்டாரநாயக்க ஆட்சி காலத்தில் 250,000 ஸ்ட்ரேலிங் பவுண் செலுத்தப்பட்டு அரசாங்கத்திற்கு சுவீகரிக்கப்பட்டதென்பதையும்;

(ii) இதன் ஒரு பகுதி தற்சமயம் இந்தியாவிற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) எஞ்சிய எண்ணெய் தாங்கிகளையும் இந்தியாவிற்கு குத்தகைக்கு விடுவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி எஞ்சிய எண்ணெய் தாங்கிகளை இந்தியாவிற்கு குத்தகைக்கு விடுவதை விட வேறேதேனும் பயன்தரும் மாற்றுவழி இல்லையா என்பதையும்;

(ii) இதன் ஒரு பகுதி தற்சமயம் இந்தியாவிற்கு குத்தகைக்கு விடுவதற்கு எதிராக மக்கள் அபிப்பிராயமொன்று நாட்டில் மேலோங்கி வருகின்றதென்பதால், அதற்கு செவிமடுக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி எண்ணெய் தாங்கிகளை கோரியுள்ள நாடுகளும் கோரிக்கைக்கான அடிப்படைகளும் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) சுதந்திரம் கிடைத்த பின்னர் ஆட்சி செய்த பல அரசாங்கங்களாலும் தற்போதைய அரசாங்கத்தினாலும் மேற்படி எண்ணெய் தாங்கிகள் பற்றி பல சந்தர்ப்பங்களில் சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரங்கள் மற்றும் கருத்திட்ட அறிக்கைகள் இருக்குமாயின், அவற்றின் தலா ஒரு பிரதியை பெற்றுத்தர முடியுமா என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

11.

59/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றை வரை இலங்கை கிரிக்கெற் நிறுவனத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட —

(i) நிரந்தர;

(ii) அமய;

(ii) பதிலீட்டு;

ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதை அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அவ்வாறு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர்களின் பெயர்கள் மற்றும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பதவிகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பதவிக்கும் அங்கீகரிக்கப்பட்டுள்ள சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் எவ்வளவென்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இலங்கை கிரிக்கெற் நிறுவனத்திற்கு —

(i) ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்யும்;

(ii) சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்தும்;

நடைமுறையினை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதை மேலும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

12.

101/2020

கௌரவ புத்திக பத்திறண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் பெருமளவிலான தரிசு வயல் நிலங்கள் காணப்படுகின்றன என்பதையும்,

(ii) மேற்படி வயல் நிலங்களிற்கான நீரோட்டம் பலவீனமாகக் காணப்படுதல் மற்றும் நீரின் இரசாயனக் கலவை மாற்றமடைதல் என்பன அதற்குக் காரணமாக அமைந்துள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மாத்தறை மாவட்டத்தில் காணப்படுகின்ற தரிசு வயற்காணிகளின் அளவு தொடர்பாக கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த அளவானது ஏக்கர்களில் எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வயற் காணிகளை பயனுள்ள பொருளாதார நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனின், அது எவ்வாறென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

13.

162/2020

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— நீர்வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள நீர் மற்றும் வடிகாலமைப்பு வசதிகள் இல்லாத வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு குடிமனை அலகிற்கும் மேற்குறிப்பிட்ட வசதிகளை வழங்கும் வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(இ) ஆமெனில், அவ்வேலைத்திட்டம் எத்தகையது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

14.

213/2020

கௌரவ மொகமட் முசம்மில்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் வருடம் முதல் 2019 வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள இரும்பு மற்றும் உருக்கின் அளவு;

(ii) இதற்காக செலவழிந்துள்ள நிதித்தொகை;

(iii) மேற்படி இரும்பு மற்றும் உருக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள நாடுகள்;

(iv) மேற்படி இரும்பு மற்றும் உருக்கினை இறக்குமதி செய்த கம்பனிகளின் பெயர்கள்;

யாவை என்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) குறிப்பிட்ட காலகட்டத்தில் இலங்கைக்கு இரும்பு மற்றும் உருக்கினை இறக்குமதி செய்வதற்காக செலவழிந்துள்ள மொத்த நிதித்தொகை யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 முதல் 10 ஆம் இலக்கங்கள் வரையான பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள், 2020 ஒக்டோபர் 06 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மற்றும் 07 ஆம் திகதி புதன்கிழமை ஆகிய தின அமர்வுகளில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 121 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினாலும் மற்றும் 2020 செப்தெம்பர் 11 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினாலும் தடைபெறாமல், ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் 2020 ஒக்டோபர் 06 ஆம் திகதி முதற்கொண்டு, செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை, வியாழக்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் சபை அமர்வு நேரங்கள், மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 12.30 வரையும் மற்றும் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 4.30 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

நிதி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(3) ஆம் பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நிதி, பொருளாதார மற்றும் கொள்கைகள் மேம்பாட்டு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2020 ஏப்ரல் 16 ஆம் திகதிய 2171/5 ஆம் இலக்க, 2020 மே 22 ஆம் திகதிய 2176/19 ஆம் இலக்க, 2020 யூன் 30 ஆம் திகதிய 2182/10 ஆம் இலக்க மற்றும் 2020 யூலை 16 ஆம் திகதிய 2184/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டதும் 2020.09.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 1),— 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 19 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 19

2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளையினை ஆக்குகின்ற அதேவேளை, அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 22302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "களஞ்சியசாலைகள் முற்பணக் கணக்கு (வெடி பொருட்கள்) - இலங்கை கடற்படை" என்பதற்கு நேரெதிராக குறிப்பீடு செய்யப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரைறை | திருத்தப்படவில்லை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 640,000,000 இருந்து ரூபா. 595,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | திருத்தப்படவில்லை |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2019.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ மஹிந்த ராஜபக்ஷ*
நிதி அமைச்சர்

2020.09.09 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 2),— 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 20 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 20

2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளையினை ஆக்குகின்ற அதேவேளை, அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "களஞ்சியசாலைகள் முற்பணக் கணக்கு — இலங்கை புகையிரதத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரைறை | ரூபா. 1,800,000,000 இருந்து ரூபா. 2,400,000,000 வரை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 1,800,000,000 இருந்து ரூபா. 1,500,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை |

(இக்கட்டளை 2019.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ மஹிந்த ராஜபக்ஷ*
நிதி அமைச்சர்

2020.09.09 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 3),— 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 21 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 21

2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளையினை ஆக்குகின்ற அதேவேளை, அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31002 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் “களஞ்சியசாலைகள் முற்பணக் கணக்கு - அரசாங்கத் தொழிற்சாலை” என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரைறை | ரூபா. 40,000,000 இருந்து ரூபா. 70,000,000 வரை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 120,000,000 இருந்து ரூபா. 70,000,000 வரை. |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | திருத்தப்படவில்லை |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை |

(இக்கட்டளை 2019.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ மஹிந்த ராஜபக்ஷ*
நிதி அமைச்சர்

2020.09.09 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 4),— 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 22 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 22

2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளையினை ஆக்குகின்ற அதேவேளை, அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31003 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் “வேலை நிறைவுற்ற முற்பணக் கணக்கு - அரசாங்கத் தொழிற்சாலை” என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரைறை | திருத்தப்படவில்லை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 440,000,000 இருந்து ரூபா. 360,000,000 வரை. |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2019.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ மஹிந்த ராஜபக்ஷ*
நிதி அமைச்சர்

2020.09.09 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 5),— 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழ்க்காணும் பட்டியலில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான கட்டளைகள் அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

அட்டவணை

(இணைக்கப்பட்ட அட்டவணைக்கமைவாக)

## அட்டவணை

### 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை

நிதியாண்டு 2019 தொடர்பில், 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் அதிகாரமளிக்கப்பட்டதன் பிரகாரம், அரசாங்க ஊழியர்களுக்கு முற்பணங்கள் வழங்குவது சம்பந்தமான முற்பணக் கணக்குகளின் எல்லைகளின் மாற்றங்களின் அட்டவணை

### குழுக் கட்டளை இலக்கம். 01

2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 வது பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம், இதனுடன் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் காணப்படுகின்ற விதத்தில் அரசாங்க ஊழியர்களின் முற்பணக் கணக்குகளின் விடய இலக்கங்கள் 00201, 02001, 02401, 05101, 05201, 05301, 05401, 05501, 05601, 13001, 15801, 20101, 22301, 22401, 22501, 23101, 28301, மற்றும் 33101 ஆகியவை தொடர்பான அச்சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் நிரல் II மற்றும் IV என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய வரையறையினைத் திருத்துவதோடு, அதே சட்டத்தின் அவ் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட III ஆம் நிரலில் காணப்படும் ஆகக் குறைந்த வரையறைகளையும் மாற்றுகின்றேன்.

| தொ. இல. | அமைச்சு / திணைக்களம் | விடய இல. | II அரசாங்கத்தின் செயற்பாடுகளின் செலவினத்தின் உச்ச எல்லைகள் (ரூபா) | | III அரச செயற்பாட்டு வரவிற்கான ஆகக் குறைந்த எல்லைகள் (ரூபா) | | IV அரச செயற்பாட்டு பற்று மீதிக்கான உச்ச எல்லைகள் (ரூபா) | | கட்டளை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | இருந்து | வரை | இருந்து | வரை | இருந்து | வரை | |
| 1. | பிரதம அமைச்சர் அலுவலகம் | 00201 | 23,000,000 | 21,000,000 | 11,000,000 | 9,500,000 | 77,000,000 | 76,500,000 | 1 |
| 2. | தேர்தல்கள் ஆணைக்குழு | 02001 | | | 18,000,000 | 20,000,000 | 95,000,000 | 115,000,000 | 2 |
| 3. | தேசிய கொள்வனவு ஆணைக்குழு | 02401 | 1,200,000 | 2,100,000 | | | 3,000,000 | 4,000,000 | 3 |
| 4. | டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் | 05101 | | | 2,500,000 | 1,300,000 | | | 4 |
| 5. | விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் | 05201 | | | 22,300,000 | 20,000,000 | | | 5 |
| 6. | பொதுவழங்கல் மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் | 05301 | | | 2,500,000 | 170,000 | | | 6 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7. | தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் | 05401 | | | 4,400,000 | 3,200,000 | | | 7 |
| 8. | வெகுசன ஊடக அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் | 05501 | 1,000,000 | 3,500,000 | 200,000 | 2,500,000 | 6,000,000 | 25,000,000 | 8 |
| 9. | விசேட பிரதேசங்கள் அபிவிருத்தி அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் | 05601 | | | 300,000 | 120,000 | | | 9 |
| 10. | பொது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அபிவிருத்தி அமைச்சர் | 13001 | 40,000,000 | 65,000,000 | 23,200,000 | 42,000,000 | 85,000,000 | 206,000,000 | 10 |
| 11. | அரச தொழில் முயற்சிகள், கண்டிய மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர் | 15801 | 4,200,000 | 5,700,000 | 2,000,000 | 2,500,000 | | | 11 |
| 12. | பௌத்த அலுவல்கள் திணைக்களம் | 20101 | | | 21,000,000 | 20,500,000 | | | 12 |
| 13. | இலங்கை கடற்படை | 22301 | | | 510,000,000 | 440,000,000 | | | 13 |
| 14. | இலங்கை விமானப்படை | 22401 | | | 418,000,000 | 380,000,000 | | | 14 |
| 15. | பொலிஸ் திணைக்களம் | 22501 | | | 1,080,000,000 | 1,060,000,000 | | | 15 |
| 16. | கடன் இணக்க சபைத் திணைக்களம் | 23101 | | | 500,000 | 449,000 | | | 16 |
| 17. | வனப் பாதுகாப்புத் திணைக்களம் | 28301 | | | 71,000,000 | 66,000,000 | | | 17 |
| 18. | சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் | 33101 | | | 275,000,000 | 255,000,000 | | | 18 |

(இக்கட்டளைகள் 2019.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

2020.09.09 ஆம் திகதி
கொழும்பு 01.

ஒப்பம்/ மஹிந்த ராஜபக்ஷ
நிதி அமைச்சர்.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

சுகாதார அமைச்சர்,— மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் (105 ஆம் அத்தியாயமான) 19(உ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 72 பிரிவின் கீழ் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 சனவரி 26 ஆம் திகதிய 2055/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2020.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

சுகாதார அமைச்சர்,— மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் (105 ஆம் அத்தியாயமான) 19(உ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 72 பிரிவின் கீழ் சுகாதார மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 திசெம்பர் 26 ஆம் திகதிய 2155/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2020.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.